Previous Date of examination : 03.11.2020

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2020

**2024-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05-ம்** நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி **அ..சா.69** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துர்க்கா | வயது | /2024 |
| கணவர் பெயர் | செந்தில் | ஜாதி | |
| தொழில் | காவல் ஆய்வாளர், தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவு | மதம் | |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | |

( 1. 2 எதிரிகள் ஆஜர். சாட்சி கு.வி.மு.ச. பிரிவு 311 -ன்கீழான மனு எண்.2148/2024 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி )

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி..**

அ.சா.ஆ.15 ஆவணத்தில் 2 வது எதிரியால் எழுதப்பட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரம் குறித்து 2 வது எதிரியிடமிருந்து மாதிரி கையொப்பம் அல்லது அவரது அலுவலகத்திலிருந்து மாதிரி கையொப்பம் பெற்று தாங்கள் கையெழுத்து பரிசோதனை நிபுணருக்கு அனுப்பி அதில் 2 வது எதிரியால் எழுதப்பட்டது என்பதை ஊர்ஜிதம் செய்யப்பட்டதா என்று கேட்டால்? கையெழுத்து நிபுணருக்கு அனுப்பப்படவில்லை. கையெழுத்து நிபுணரின் அறிக்கைக்காக அனுப்பினால் 2 வது எதிரியின் கையெழுத்து அல்ல என்பது தெரிந்து விடும் என்பதால்தான் நான் அனுப்ப வில்லை என்று சொன்னால் ? சரியல்ல. அ.சா.ஆ.15 ஆவணத்தில் உள்ள விபரங்களை மூன்றாம் நபர் மூலம் எழுதவைத்து தயார் செய்துள்ளோம் என்றால்? சரியல்ல. நான்

சொன்னதன் பேரில்தான் எனக்கு அடுத்த வந்த விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் ராணியும் கையெழுத்து நிபுணரின் அறிக்கை பெற நடவடிக்கை எடுக்காமல் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால்? சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஒம்/- பெ. மகேந்திரவர்மா,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**